மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாமக்கல்லைப்பற்றி உங்களுக்கும் தெரியும், அமைச்சருக்கும் தெரியும். நாமக்கல்லை ஒரு சுற்றுலா கேந்திரமாக அமைப்பார்களா என்று கேள்வியைக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாட்டில் பல இடங்கள் இருக்கின்றன. திருத்தலங்கள், சரித்திரப் புகழ்பெற்ற கோட்டைகள், இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி கட்டப்பட்ட கோயில்கள்—புழலேரிக்குப் பக்கத்தில் உள்ள கோயில் அதுபோன்றது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்—எல்லாம் இருக்கின்றன. எல்லாம் வளர்ச்சிபெறுகிற காலத்தில் நாமக்கல்லும் வளர்ச்சிபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

First-aid Boxes in Taxis

* 834 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the police in Madras City is aware that taxis and other public carriers do not keep first-aid boxes in their vehicles; and

(*b*) if so, the steps taken thereon ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) வாடகை வண்டிகளில் முதலுதவிப் பெட்டிகளைப் பொருத்த வலியுறுத்தப்படுகின்றனர். பொருத்த தவறியவற்றின் மீது வழக்கு தொடரப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : இது சம்பந்தமாக ஒழுங்கான செக்கிங் நடக்கவில்லை என்கிற புகார்களுக்கு இடம் கொடுக்காமல் தக்க முறையில் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது சம்பந்தமாக ஒழுங்காக நடவடிக்கை எடுத்திருப்பதினால்தான் 1971-ஆம் ஆண்டில் 250 லாரிகளும், 35 பேருந்துகளும், 19 வாடகை வண்டிகளும் இந்தக் குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

Automatic signal lights in Madras

* 835 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Madras City Police and made arrangements to synchronise the automatic signals at Madras City to regulate vehicular traffic; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) அண்ணாசாலையில் ஸ்பென்ஸர்ஸ் அருகிலும் வெலிங்டன் அருகிலுமுள்ள நாற்சந்திகளில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கிப் போக்குவரத்து அடையாள விளக்குகளை ஒரே காலத்தில் இணைந்து இயங்கச் செய்வதற்கான செயற்குறிப்பு ஒன்று சென்னை மாநகர சாலை மேம்பாடு போக்குவரத்து திட்டக்குழுவினால் ஆலோசிக்கப்பட்டு கைவிடப்பட்டது.

THIRU N. DENNIS : May I know whether this automatic light system has improved the flow of traffic and reduced the rate of accidents?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Yes, Sir.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த ஆட்டமாடிக் சிக்னல் போட்ட பிறகு விபத்துகள் அதிகமாகியிருக்கிறதா? குறைந்திருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விபத்துக்களைக் குறைக்க வேண்டும் என்றுதான் இந்த ஆட்டமாடிக் சிக்னல்கள் போடப்பட்டு வருகின்றன. விபத்துகள் குறைந்துதான் இருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆட்டமாடிக் சிக்னல் எவ்வளவு நேர இடைவெளியில் மாறி மாறி வரும் என்பது கொள்கை அளவில் நிர்ணயிக்கப்படுகிறதா? கார் ஓட்டிகளுக்கு அது இடைஞ்சலாக இருப்பதாக ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதியில்—நாற்சந்திப் பகுதிகளாகப் பார்த்து இவைகள் அமைக்கப்படுகின்றன.

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply stated that it was not possible to connect the two automatic signals at the moment. Will it not be possible for the Traffic Department to properly synchronise? When going along Edward Elliots Road, there is one stop; the rate of speed could be only 20 miles per hour. Immediately there is another stop. Can it not be done as in Bombay and other cities, so that when there is green signal at one place it will be so at other places also and traffic could flow smoothly; if there is green signal at one point, we could go on a particular rate of speed without being stopped at the next signal. That is what is happening in Bombay and other cities. Can we not synchronise like that here?

1972 ஏப்ரல் 1]

THE HON. THIRU S. RAMACHANDRAN : Owing to mixed traffic in all main roads and also due to pedestrian crossings and due to extra expenditure that is likely to be involved, for the time being the proposal is shelved.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக தானியங்கி அடையாள விளக்குகள் மதுரையில் ஏராளமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் வைக்கப்பட வேண்டிய இடங்கள் இருக்கின்றன. ஆகவே, இதை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் பொருத்துவதற்கு படிப்படியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

Mutts of Kanchi Sankaracharya

* 836 *Q*.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Mutts of Kanchi Sankaracharya have been drawn under the purview of the Hindu Religious Endowment Department;

(*b*) if not, the reasons; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(உ) இம்மடத்தின் சகாயத்தொகையை இதன் வருவாய் ரூ. 3,74,731 மீது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே காஞ்சி சங்கராச்சாரியார் மடம்போல எத்தனையோ மடங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. மடாதிபதிகளுக்கு இந்தியா பூராவும் சுற்றிவர டெல்லி சர்க்கார் இலவச ரயில்வே பாஸ்கூட அளித்திருக்கிறார்கள். எனவே, மடாலயங்களின் சொத்துக்களைக் கணக்கெடுத்து, நமது அரசு உபரியாக இருப்பதைக் கைப்பற்றுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, எத்தனை மடங்கள் என்கிற கணக்கு விவரம் இல்லை. மடத்தினுடைய சொத்துக்களிலிருந்து செலவு செய்யக்கூடியவற்றை அறநிலைய ஆணையாளரின் ஒப்புதலைப்